1974 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ). தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.